# தமிழ்ப் புத்தாண்டு!

### தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!

புத்தாண்டு பிறந்ததன்றோ;
புதுமைகள் சேருமன்றோ!
வதுவைகள் கூடுமன்றோ;
வாய்ப்புகள் காண்பமன்றோ!

பூகோள நடுக்கோட்டில்
பொன்னார்ந்த சூரியனார்,
பொலிவுடன் நிலையுங் காலை;
புத்தாண்டு பிறந்து ஏகும்!

சித்திரை முதல்நாள் எனும்
சீர்மிகு நன்நாள் இதுவே,
முத்திரை அறிவு கொண்டநம்
முன்னோர் செயலின் கீர்த்தி!

இத்தரையில் வாழ்வரெலாம்
சந்திரனொடு திங்களாக்க,
வித்தகராம் தமிழர் தாமே;
சூரியனார் வழியில் சென்றார்!

தைத்திங்கள் வடகதியாம்,
தென்வழியோ ஆடியாகும்!
இத்துனையும் அறிவு கொண்டு,
கொத்தாக செய்தார் முன்னோர்;

பத்திரமாய் வளர்ப்போம் அறிவை;
பார்புகழும் தமிழன் கீர்த்தி,
பாங்குடனே காப்போம் பெருமை;
பரிவுடனே உண்மை காப்பீர்!

- கவிஞர் கவிவளவன் **14-04-2014**

### விகாரி (எழில் மாறல்)

ஆண்டது பிறப்பதுவோர் அதிசயமன்று;
ஆன்றநல் தமிழர்தம் அறிவைச் செப்பும்,
வரையறைக் கொண்ட காலக் கணிதம்!
பகலன் பார்வையைப் பதிவில் கொண்டு,

சுழற்சியின் கணக்கில் கணிதம் செய்து,
ஆண்டையும் நமக்கு அளித்து வைத்தான்!
திசை தொடும் காலம் வடக்கும் தெற்குமாய்,
வடமொழிப் பெயரில் தமிழைச் சாய்த்தது!

காலம் விழுமிய கணக்குகள் யாவும்;
கணித்தே வைத்து வாழ்வியல் கண்டோன்!
இயற்கை எய்தும் மறுமுறைச் சுழற்சி,
இனியதாய் ஆண்டுள் கணிதம் ஆனது!

பூமியின் மீதுநேர்ப் பார்வை பொழிய,
சித்திரை என்பதாய்ச் சிந்தை சொன்னது!
ஆண்ட தமிழரின் அறிவைக் காப்போம்!
அவனியில் நமது பெருமை வளர்ப்போம்!

“விகாரி” என்றே விளம்பி வந்ததை,
“எழில்மாறல்” என்றே எழுதிவைத்தார்!
தமிழே என்பதால் மகிழ்ச்சி கொள்வோம்!
தகைவுடன் சொல்வேன் வாழ்த்து தனையே!
**(14-04-2019)**

### நற்செய்கை புத்தாண்டு! (சுபகிருது)

நற்செய்கை என்றே நம் முன்னோர் நவின்றதினால்,
நற்செயலாய் பலவும் நானிலத்தில் நாம் பெறுவோம்!
கற்றோரும் மற்றோரும் காழ்ப்பின்றி செயல் படுவோம்!
பொற்பதங்கள் நிறைவதுவாய்ப் புதுமைகள் தேடிடுவோம்!

பொல்லாத கனவுகளைப் புதைத்தே அழித்திடுவோம்!
அல்லாத சிந்தனையை மனம் நீக்கி ஒழித்திடுவோம்!
நல்லவையே தேடிநின்று நன்மைகளை அடைந்திடுவோம்!
கல்வியை விலையின்றி யாவருக்கும் தர முயல்வோம்!

வேற்றுமையை உள்ளத்தில் வேர்விடாது செய்திடுவோம்!
ஒற்றுமையை உள்ளத்திலும் உருப்படச் செய்திடுவோம்!
கற்றதாம் கல்விகொண்டே கடவுளையும் அறிந்திடுவோம்!
மற்றவைப் போல்தான் நாமும் பிறந்தோம் வாழ்ந்திடவே!

அனைவருக்கும் இனிய **தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்**!
அன்புடன்,
**கவிவளவன்** ஆகிய **கு.ப.அசோகன்**, 14-04-2022

## புத்தாண்டு வாழ்த்து!

பிறந்தது புத்தாண்டு பெருமைகள் சேர்ந்திட!
மறந்திட வேண்டும் மாசுற்ற காலங்கள்!
அறமென்ற சொல்லாய் அவனியில் வாழ்ந்தோம்!
மறத்தமிழனாய் மாண்புற வாழ்ந்தோம்!

பண்ணீராயிம் பண்பட்டநம் தமிழ் மரபை,
எண்ணியசிலஆண்டுகள் வளர்ந்தார் மாட்டு;
இழந்தா விடுவோம்? எண்ணாதீர் என்றும்!
கழிந்த இருகடல்கோள் பின்னும் வாழும் மரபை,

அழிக்க நினைப்போர் அவனியில் உண்டெனில்,
அறியாமை என்றே அழகுடன் சொல்வோம்!
வறியதாம் அறிவுவென்றே மன்னிப்போம் தாமே!
வந்தாரை வாழ்விக்கும் நம்மரபுடன் எந்நாளுமே!

எந்தமிழும் இயற்கை எம்மரபும் இயற்கை!
சொந்தமாய் இறைசெய்தோம் அறிவுடனேதான்!
சித்தர்களாய் மரபுவழி பெயருமிட்டோம்!
எத்திசையும் வியந்திட வாழ்ந்திருந்தோம்!

-வேறு-

கல்லணைக் கட்டிய சோழன்;
கடல்வழி வணிகம் கண்டோர்!
வல்லமை கொண்ட தமிழன்;
கட்டிடடச்சிற்பி யன்றோ!
மல்லையின் குடவறையென்ற,
மருவிலாக் கீர்த்தி யெனவாய்;
எல்லையில் பெருமை பெற்றோம்!
எப்படித் தோற்று நிற்போம்!

வல்லவன் இறைவன் வகுத்த,
வான்புகழ் கொண்ட மரபை;
வெல்பவர் எவரும் இல்லை!
வீண்பழி அடைய வேண்டாம்!
அல்லவை நீக்கச் செய்வோம்!
அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்து!
நல்லன விரும்பி அடைவோம்!
**விளம்பி** ஆண்டில் தானே!

- அன்புடன்,
கு.ப. அசோகன்.(14-04-2018)

## புத்தாண்டு வாழ்த்து! 14-04-2021

பிலவ ஆண்டெனப் பிறந்தது இன்று!
விலகும் துயர்கள் எனவாய் நினைந்து,
வளரும் சிந்தையை மனதிலேற்றி;
தளர்வாய்ப் போகும் நெருக்கடி காலம்,

மலரும் இனியப் பயணம் எனவாய்,
மனத்தில் சூடி, மருவிலா நினைவில்,
அனைத்திலும் நிறையே அடுத்து ஆகுமாம்;
கனத்த நினைவைக் கலைத்து போட்டு,

மனத்தில் திடமாய் நினைவைச் செய்து,
மலரும் ஆண்டின் இன்பம் அடைவோம்!
மறுபடி நினைப்போம், தமிழன் அறிவை!
அறுபது ஆண்டு காலத்தின் சுழற்சி!

உருபெறும் நாளாம் சித்திரை ஒன்றோ,
அறிவால் விளைந்த காலக் கணக்கு!
வரையறை செய்த காலத்தின் கணக்கு!
வகுத்த நாளின் கணக்கோ சந்திரனோடு!

தொகுத்த மாதம் அதுவோ சூரியன் சுழற்சி!
வகுத்து அறிவில் வாழ்வது தமிழனே யன்றோ!
புகுத்தும் பொய்மை புறத்தே தள்ளிவைத்து,
வகுத்த வாழ்வில் நிறைந்து வாழ்வோம்!

அன்புடன்,
கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்

## புத்தாண்டு வாழ்த்து! (14-04-2017)

புத்தாண்டு என்பதோர் புதுமையே அல்ல;
பொலிந்திடும் உலகியல் நிகழ்த்துமோர் மாற்றம்!
புறப்பட்ட இடத்துள் புகுந்திடும் நிலையே!
இயற்கை எழுதிடும் காலக் கணக்கு!
இன்னிய தமிழனின் அறிவியல் பார்வை;
சித்திரை முதல்நாள் சிந்தையில் தொடுத்தது!
பூமியின் நடுகோட்டில் பொலிவாய்ச் சூரியன்,
நிலைத்திடும் நன்நாள்; இரவும் பகலும்,
சமமாய் இருந்திட புத்தாண்டின் தொடக்கம்!
வேனில் குளிர்என காலப் பகுப்பும்;
இயற்கையின் வழியே மாதக் கணக்கும்;
எழுதிய தமிழனின் அறிவை வியப்பீர்!
வடதிசை நகரும் உத்திரா யனமும்,
தென்திசை சூடும் தக்ஷினா யனமும்,
தமிழன் அறிவே தகைவுடன் சொல்வேன்!
ஆண்டின் கணக்கை அழகாய் செய்தது,
தமிழன் மட்டுமே தரணியில் என்பேன்!
அறிவைச் சுமந்த ஆற்றலை நினைப்பீர்;
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்து!

**-கவிவளவன் 14-04-2017 (05.45 AM)**